"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 16,70,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

8. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 29-4-2003 ஆம் நாளன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி எண் 32-ஐ 29-4-2003 ஆம் நாளன்று தளர்த்தி, அந்நேரத்தினை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே இல்லை.

2003 ஏப்ரல் 28] [பேரவைத் தலைவர்]

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

29-4-2003 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(29-4-2003)* காலை *10-00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை, பிற்பகல் 6-24 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

-ஏதுமில்லை-

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

214. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மானியக் கோரிக்கைமீதான விவாதத்தின்போது மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2003-2004.* (தமிழ்)

215. மானியக் கோரிக்கை எண் *24*—உள் துறை — இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2003—2004.* (தமிழ், ஆங்கிலம்)

216. மானியக் கோரிக்கை எண் *46*—போக்குவரத்துத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2003—2004.* (தமிழ், ஆங்கிலம்)

217. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்தி ஏழாவது அறிக்கை. *(2001—2003)*

218. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்தி எட்டாவது அறிக்கை. *(2001—2003)*

219. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்தி ஒன்பதாவது அறிக்கை. *(2001—2003)*

220. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முப்பதாவது அறிக்கை. *(2001—2003)*